8. அறிவிப்புகள்—தொடர்ச்சி

(ஏ) பேரவைக் குழுக்களுக்கான உறுப்பினர்கள் தேர்வு

(அ) மதிப்பீட்டுக் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 2009–2010 ஆம் ஆண்டிற்கான மதிப்பீட்டுக் குழுவிற்கு (Committee on Estimates) பேரவையின் 16 உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்க வேண்டும். கீழ்க்காணும் 16 உறுப்பினர்களிடமிருந்து முறைப்படியான வேட்பு மனுக்கள் வரப்பெற்றுள்ளன:

திரு. குத்தாலம் க. அன்பழகன்

திரு. அ. சௌந்தரபாண்டியன்

திரு. ச. லட்சுமணன்

திரு. சபா. இராஜேந்திரன்

செல்வி ஆ. அங்கையற்கண்ணி

திரு. பி. பலராமன்

திரு. ஆர். சின்னசாமி

திரு. போ. சின்னப்பன்

திருமதி பதர் சயீத்

திரு. விடியல் எஸ். சேகர்

திரு. கு. ஹசன் அலி

திரு. எஸ். ஜெயபால்

திரு. தி. வேல்முருகன்

திரு. என். நன்மாறன்

திரு. தி. இராமசாமி

டாக்டர் தி. சதன் திருமலைக்குமார்

2009 ஜூலை 21] [பேரவைத் தலைவர்]

ஏற்கக்கூடிய வேட்பு மனுக்களை அளித்துள்ள வேட்பாளர்களின் எண்ணிக்கை, தேர்ந்தெடுக்கப்பெற வேண்டியவர்களின் எண்ணிக்கைக்குச் சமமாக இருப்பதால் 2009–2010 ஆம் ஆண்டிற்கான மதிப்பீட்டுக் குழுவிற்கு இவர்கள் முறைப்படி தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கிறேன்.

தவிர, நிதித் துறைக்குப் பொறுப்பு வகிப்பவர் என்கிற முறையில், மாண்புமிகு நிதி அமைச்சர், பொதுக் கணக்குக் குழுவின் தலைவர் மற்றும் பொது நிறுவனங்கள் குழுவின் தலைவர் ஆகியோர் தங்கள் அலுவல் காரணமாக இக்குழுவின் உறுப்பினர்களாவர்.

பேரவை விதி 196–ன்கீழ், திரு. குத்தாலம் க. அன்பழகன் அவர்களை இக்குழுவின் தலைவராக நான் நியமனம் செய்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

(ஆ) பொதுக் கணக்குக் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 2009–2010 ஆம் ஆண்டிற்கான பொதுக் கணக்குக் குழுவிற்கு (Committee on Public Accounts) பேரவையின் 16 உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்க வேண்டும். கீழ்க்காணும் 16 உறுப்பினர்களிடமிருந்து முறைப்படியான வேட்பு மனுக்கள் வரப்பெற்றுள்ளன:

திரு. கு. பிச்சாண்டி

திரு. எஸ்.கே. வேதரத்தினம்

திரு. அன்பில் பெரியசாமி

திரு. கூ.ந. சேகரன்

திரு. வே. செந்தில் பாலாஜி

திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்

திரு. தா. மலரவன்

திரு. பி. தங்கமணி

திரு. சு. சிவராஜ்

திரு. இரா. இராம் பிரபு

திரு. என்.ஆர். ரெங்கராஜன்

திரு. கி. ஆறுமுகம்

திருமதி ரா. லீமா றோஸ்

திரு. வை. சிவபுண்ணியம்

திரு. ஆர். ஞானதாஸ்

திரு. து. ரவிக்குமார்

ஏற்கக்கூடிய வேட்பு மனுக்களை அளித்துள்ள வேட்பாளர்களின் எண்ணிக்கை, தேர்ந்தெடுக்கப்பெற வேண்டியவர்களின் எண்ணிக்கைக்குச் சமமாக இருப்பதால், 2009–2010 ஆம் ஆண்டிற்கான பொதுக் கணக்குக் குழுவிற்கு இவர்கள் முறைப்படி தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கிறேன்.

தவிர, நிதித் துறைக்குப் பொறுப்பு வகிப்பவர் என்ற முறையில், மாண்புமிகு நிதி அமைச்சர், மதிப்பீட்டுக் குழுவின் தலைவர் மற்றும் பொது நிறுவனங்கள் குழுவின் தலைவர் ஆகியோர் தங்களது அலுவல் காரணமாக இக்குழுவின் உறுப்பினர்களாவர்.

பேரவை விதி 204–ன்கீழ், திரு. சு. சிவராஜ் அவர்களை இக்குழுவின் தலைவராக நான் நியமனம் செய்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 4–10

(இ) பொது நிறுவனங்கள் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 2009–2010 ஆம் ஆண்டிற்கான பொது நிறுவனங்கள் குழுவிற்கு (Committee on Public Undertakings) பேரவையின் 16 உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்க வேண்டும். கீழ்க்காணும் 16 உறுப்பினர்களிடமிருந்து முறையான வேட்பு மனுக்கள் வரப்பெற்றுள்ளன:

திரு. இ.ஏ.பி. சிவாஜி

திரு. பி. மூர்த்தி

திரு. துரை சந்திரசேகரன்

2009 ஜூலை 21] [பேரவைத் தலைவர்]

திரு. ஆர். சிவானந்தம்

திரு. இரா. இராஜேந்திரன்

திரு. எல்.பி. தர்மலிங்கம்

திரு. சி.வி. சண்முகம்

திரு. சொ. கருப்பசாமி

திரு. ஆ. அருண்மொழிதேவன்

திரு. இரா. குமரகுரு

திருமதி டி. யசோதா

திரு. கே.எஸ்.கே. ராஜேந்திரன்

திரு. கே. கோபிநாத்

திரு. அ. தமிழரசு

திரு. இல. வேலுசாமி

டாக்டர் ஆஸ்கார் சி. நிக்லி

ஏற்கக்கூடிய வேட்பு மனுக்களை அளித்துள்ள வேட்பாளர்களின் எண்ணிக்கை தேர்ந்தெடுக்கப்பெற வேண்டியவர்களின் எண்ணிக்கைக்குச் சமமாக இருப்பதால், 2009–2010 ஆம் ஆண்டிற்கான பொது நிறுவனங்கள் குழுவிற்கு இவர்கள் முறைப்படி தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கிறேன்.

தவிர, மதிப்பீட்டுக் குழுவின் தலைவர் மற்றும் பொதுக் கணக்குக் குழுவின் தலைவர் ஆகியோர் அலுவல் காரணமாக இக்குழுவின் உறுப்பினர்களாவர்.

பேரவை விதி 213–ன்கீழ் திருமதி டி. யசோதா அவர்களை இக்குழுவின் தலைவராக நான் நியமனம் செய்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

(ஈ) அவை உரிமைக் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *2009–2010 ஆம் ஆண்டிற்கான அவை உரிமைக் குழுவிற்கு (Committee of Privileges) பேரவையின் 14 உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்க வேண்டும்.*

கீழ்க்காணும் 14 உறுப்பினர்களிடமிருந்து முறைப்படியான வேட்பு மனுக்கள் வரப்பெற்றுள்ளன:

திரு. தா. உதயசூரியன்

திரு. டி. செங்குட்டுவன்

திரு. எஸ்.ஆர். இராஜா

திரு. எஸ்.எஸ். சிவசங்கர்

திரு. அ. ராஜன்

திரு. பெ. காமராஜ்

திரு. டி. ஜெயக்குமார்

திரு. இரா. விசுவநாதன்

திரு. பி.கே. சேகர்பாபு

திரு. சி. ஞானசேகரன்

திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்

திரு. மு.க. பெரியசாமி

திரு. கே. மகேந்திரன்

திருமதி பி. பத்மாவதி

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

2009 ஜுலை 21] [பேரவைத் தலைவர்]

ஏற்கக்கூடிய வேட்பு மனுக்களை அளித்துள்ள வேட்பாளர்களின் எண்ணிக்கை, தேர்ந்தெடுக்கப்பெற வேண்டியவர்களின் எண்ணிக்கைக்குச் சமமாக இருப்பதால், 2009–2010 ஆம் ஆண்டிற்கான அவை உரிமைக் குழுவிற்கு இவர்கள் முறைப்படி தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கிறேன்.

தவிர, மாண்புமிகு பேரவை முன்னவர், மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் மற்றும் எதிர்க்கட்சித் தலைவர் ஆகியோர் தங்கள் அலுவல் காரணமாக இக்குழுவின் உறுப்பினர்களாவர்.

பேரவை விதி 227–ன்கீழ் மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் இக்குழுவின் தலைவராக இருப்பார்.

(ஐ) பல்கலைக்கழகங்களின் ஆட்சிமன்றப் பேரவை / ஆட்சிக் குழு / நிருவாகக் குழுக்களுக்கு உறுப்பினர்கள் தேர்வு

தமிழ்ப் பல்கலைக்கழகம்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு அறிவிப்புகள். தமிழ்ப் பல்கலைக்கழக ஆட்சிமன்றப் பேரவையின் (Senate) அலுவல் சார்பற்ற உறுப்பினராகப் பணியாற்றுவதற்கு சட்டமன்ற உறுப்பினர்கள் திரு. துரை சந்திரசேகரன் மற்றும் திரு. மா. ராஜசேகரன் ஆகியோரிடமிருந்து வேட்பு மனுக்கள் வரப்பெற்றுள்ளன. தேர்ந்தெடுக்கப்பெற வேண்டிய உறுப்பினர்களின் எண்ணிக்கையும், முறையாக வரப்பெற்றுள்ள வேட்பு மனுக்களின் எண்ணிக்கையும் சமமாக இருப்பதால், வேட்பு மனு அளித்த மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்கள் திரு. துரை சந்திரசேகரன் மற்றும் திரு. மா. ராஜசேகரன் ஆகியோர் அந்தப் பதவிக்கு முறையாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கிறேன்.

தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள உறுப்பினர்களின் பதவிக் காலம் 10–8–2012 வரை ஆகும். தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள் ஏதாவது ஒரு காரணத்திற்காகப் பேரவை உறுப்பினர் பதவியை இழக்க நேரிட்டால், அந்த நாளோடு அவர்களது ஆட்சிமன்றப் பேரவை (Senate) உறுப்பினர் பதவியும் முடிவடையும்.